**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.137/2025**

**Deposition of Witness for Prosecution PW 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராஜேஷ் | Father's Name | : | மனோகரன் |
| Village | : | நாகப்பட்டினம் | Taluk | : | நாகப்பட்டினம் |
| Calling | : | | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 10th day of February 2026.**

**(Accused absent. For petition U/s. 355 BNSS is filed and allowed).**

**முதல் விசாரணை**

நான் தற்போது நாகப்பட்டினம் Q Branch CID பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். முத்துப்பேட்டை காவல் ஆய்வாளராக பணியிலிருந்தபோது கடந்த 07.01.2024 அன்று காலை 10.30 மணியளவில் நான், தலைமை காவலர் சண்முகசுந்தரம், காவலர் 912 மணிவண்ணன் ஆகியோருடன் மதுவிலக்கு ரோந்து பணியாக விலாங்காடு சமத்துவபுரம் அருகில் கண்காணித்துக் கொண்டிருந்தபோது சமத்துவபுரம் பஸ் ஸ்டாப் அருகில் நின்று கொண்டிருந்த நபர் எங்களை கண்டதும் ஓட

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:31:01 +0530

எத்தனித்தவரை விரட்டி பிடித்தோம். அவரை பிடித்து விசாரித்ததில் அவரது பெயர் சரத்குமார் என சொன்னார். அவர் நின்ற இடத்தை சோதனை செய்தபோது 180 மிலி அளவு கொண்ட Top Star பிராந்தி பாட்டில்கள் 10 இருந்தன. அதில் ஒரு பாட்டிலை திறந்து நுகர்ந்து பார்த்தபோது ஒருவித விஷ நெடியுடன் கூடிய வாடை வீசியது. அவரிடம் பிராந்தியை விற்பதற்கான உரிமமோ அரசு அனுமதியோ இல்லை. 10.40 மணிக்கு அதே இடத்தில் எதிரியை குற்ற காரணம் கூறி கைது செய்து 10.50 மணிக்கு தலைமை காவலர் சண்முகசுந்தரம், காவலர் மணிவண்ணன் ஆகியோர் முன்னிலையில் 10 பிராந்தி பாட்டில்களை அ.சா.ஆ.1 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அதில் 2 பாட்டில்களை மாதிரிக்காக எடுத்து SHO ஷீல் வைத்தும் மீதமுள்ள 8 பாட்டில்களை 11.00 மணிக்கு அதே இடத்தில் அ.சா.ஆ.2 அழிப்பு மகஜர் தயார் செய்து மேற்படி 2 சாட்சிகள் முன்னிலையில் கொட்டி அழிக்கப்பட்டது. மாதிரிக்காக எடுக்கப்பட்ட 2 பாட்டில்கள் ஏற்கனவே சா.பொ.1 வரிசையாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி மற்றும் தடயத்துடன் நிலையம் வந்து 11.30 மணிக்கு எதிரி மீது முத்துப்பேட்டை காவல் நிலைய கு.எண் 6/2024, Sec. 4(1)(a), 4(1-A) TNP Act ன்படி முதல் தகவலறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவலறிக்கை **அ.சா.ஆ.3**. அன்றைய தினமே 13.00 மணியளவில் சாட்சிகள்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:31:07 +0530

சற்குணம், முத்து ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.4**. அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5**. சா.பொ.1 வரிசை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட படிவம் 91 **அ.சா.ஆ.6**. 07.01.2024 அன்று 2 ம் நிலை காவலர் மணிவண்ணன், தலைமை காவலர் சண்முகசுந்தரம் ஆகியோரை விசாரித்தும் 08.01.2024 அன்று சாட்சிகள் முத்து, சற்குணம் ஆகியோரை விசாரித்தும் 11.01.2024 அன்று காவலர் வினோதனை விசாரித்தும் வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். T.No.74 / 2024, TAN / PRO / 07 / 2024, Dated 24.01.2024 தடய அறிவியல் ஆய்வக அறிக்கை **அ.சா.ஆ.7**. டாக்டர் பாலாமணி அவர்கள் ஆட்ரோபின் கலந்த பிராந்தி அருந்துபவர்களுக்கு ஏற்படும் உள் விளைவுகள் பற்றி வழங்கிய கருத்துரை **அ.சா.ஆ.8**. 25.01.2024 அன்று தடய அறிவியல் ஆய்வக உதவி இயக்குநர் காயத்திரியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அறிக்கை பெற்றேன். 20.02.2024 அன்று டாக்டர் பாலாமணியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது புலன் விசாரணை முடித்து 20.02.2024 அன்று எதிரி மீது Sec. 4(1)(a), 4(1-A) TNP Act ன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் சாட்சி முத்து ஆகியோர் சம்பவம் பற்றி கூறியதையே நான் வாக்குமூலமாக பதிவு செய்துள்ளேன்.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:31:15 +0530

**குறுக்கு விசாரணை**

சம்பவ தினத்தன்று யார் யார் ரோந்து பணிக்கு சென்றோம் என்பதற்காக பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை. வழக்கின் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகள் காவல் துறையை சேர்ந்தவர்கள் என்றால் சரி. தனிநபர் யார் முன்னிலையிலும் கைப்பற்றுதல் மகஜர் பதிவு செய்யப்படவில்லை என்றால் தனிநபர்கள் யாரும் முன்வரவில்லை. முன்வராத தனிநபர்கள் யரென்ற விபரம் குற்ற இறுதி அறிக்கையில் சொல்லப்படவில்லை என்றால் சரி. அ.சா.ஆ.3 பதிவு செய்த நேரம் 11.30 என்றால் சரி. பொதுவாக கு.எண் என்பது முதல் தகவலறிக்கை பதிவு செய்யும்போது கொடுக்கப்படுவதுதான் என்றால் சரி. என்னால் தயார் செய்யப்பட்டதாக சொல்லப்படும் கைப்பற்றுதல் மகஜர் காலை 10.50 மணிக்கு தயார் செய்யப்பட்டது என்றால் சரி. அந்த கைப்பற்றுதல் மகஜரில் கு.எண் 6/2024 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. கு.எண் கொடுத்து முதல் தகவலறிக்கை பதிவு செய்ததற்கு 45 நிமிடங்களுக்கு முன்பாகவே தயார் செய்யப்பட்டதாக சொல்லப்படும் கைப்பற்றுதல் மகஜரில் கு.எண் எதனடிப்படையில் குறிப்பிடப்பட்டது என்பதற்கான தனி அறிக்கை எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:31:22 +0530

செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால், மேற்கண்டவாறு கு.எண் பதிவு செய்ததற்கு CCTNS காவலரிடம் கு.எண் தெரிந்துகொண்டு மேற்கண்டவாறு பதிவு செய்தேன். இந்த விபரம் வழக்கிற்காக மிகைப்படுத்தி சொல்லப்படும் தவறான தகவல் என்றால் தவறு. நான் கைப்பற்றியதாக சொல்லப்படும் மது பாட்டில்களின் வெளிப்புற நிறம் பற்றி குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. கொட்டி அழிக்கப்பட்டதாக சொல்லப்படும் இடத்திலேயே வெற்று பாட்டில்களையும் அழித்து விட்டேன். வெற்று பாட்டில்களையும் அழித்து விட்டதாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் அழித்தல் மகஜர் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அழித்தல் மகஜர் தயார் செய்யும்போது எனது பதவிக்கு நிகரான அதிகாரியோ அல்லது கலால் துறை அதிகாரிக்கோ தகவல் கொடுத்து அவர்கள் முன்னிலையில் அழித்தல் மகஜர் தயார் செய்யப்பட்டதா என்றால் இல்லை. ஆனால், முத்துப்பேட்டை காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் உத்தரவு பெற்று அழித்தல் மகஜர் தயார் செய்யப்பட்டது. 32 TNP Act ல் கூறப்பட்டுள்ள சட்ட வழிமுறைகளை பின்பற்றாமல் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு சட்டத்தின் பால் நிலைநிறுத்தக்கூடிய வழக்கல்ல என்றால் தவறு. நான் சொன்ன தேதி, நேரத்தில் எதிரியை கைது செய்யவில்லை எனவும் அவரிடமிருந்து தடய பொருள் எதையும்

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:31:28 +0530

கைப்பற்றவில்லை எனவும் காவல் நிறைய புள்ளி விபர கணக்கிற்காக எதிரிக்கு எதிராக ஜோடிக்கப்பட்ட வழக்கு என்றால் தவறு. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்புமில்லை என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:31:35 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.